நின்றால்கூட, மின்சாரம் இல்லை என்று சொன்னால்கூட, ஏற்கெனவே நீரேற்றிய இடங்களில் இருக்கின்ற நீரின் அளவு அங்கே அதிகமாகி வேறுவிதமான நட்டம் ஏற்படும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதுபோன்று வருகின்ற பகுதிகளுக்கு முறையாக, குறித்த காலத்தில் எப்பொழுதெல்லாம் மோட்டார்களைப் பயன்படுத்துகிறார்களோ அந்த நேரத்தில் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, அது முறையாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது வைத்த கோரிக்கை தேவையில்லை என்றே நான் கருதுகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

நெடுஞ்சாலைப் பணிகள்

***6625—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட கோயம்புத்தூர்–மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.சி. ஆறுக்குட்டி, அமைச்சர் பதில் சொன்ன பிறகு நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

2012 ஏப்ரல் 10]

கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட கோயம்புத்தூர்–மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை, மே திங்கள் 2012–க்குள் முழுமையாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர்–மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை முடிக்கத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.*

திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலாடுதுறை தொகுதியில், மயிலாடுதுறை நகரத்தைச் சுற்றி புறவழிச் சாலை அமைப்பதற்காக நிலம் எடுக்கும் பணி மிகவும் தாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தச் சாலைப் பணியை வெகு விரைவில் எடுத்து, முடித்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று புறவழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றபோது, அந்தச் சாலைகள் அமைக்கத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துகின்ற பணியினை மேற்கொள்ளும்போது, நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடுத்து விடுவதால், காலதாமதம் ஏற்படுகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறே அந்தப் புறவழிச் சாலையை அமைப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் விரைவாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி–சேலம் இருவழிச் சாலையை விரிவுபடுத்தும் திட்டம் நெடுஞ்சாலைத் துறையிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் திட்டம் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே அந்தச் சாலையினுடைய அவசியத்தைக் கருதி, கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச் சென்று, அதுகுறித்து அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பிரதான சாலையிலிருந்து பிரிகின்ற விக்கிரவாண்டி–தஞ்சாவூர் சாலை—*NH–45 *என்று நினைக்கிறேன். அந்தச் சாலையை நான்கு வழிச் சாலையாக மேம்படுத்தும் பணி எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனி வினா எழுப்பினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விரிவான பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

2012 ஏப்ரல் 10]

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திலிருந்து மைசூர் செல்லக்கூடிய நெடுஞ்சாலையில், கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய மேட்டுப்பாளையம் சாலை கடந்த 3 ஆண்டுக் காலமாக போடப்படாமல் இருப்பதால், நெருக்கடிக்குள்ளாகி பல்வேறு விபத்துகள் ஏற்பட்டு, உயிரிழப்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றது. இது சுற்றுலா மையமான ஊட்டிக்குச் செல்லக்கூடிய ஒரு முக்கியமான பாதை. உலகம் முழுவதிலும் இருக்கக்கூடிய சுற்றுலாப் பயணிகள் அங்கே வருகின்றார்கள். எனவே, அந்தச் சாலையை உடனடியாகச் செப்பனிடுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசால் பராமரிக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளுக்கெல்லாம் நிதியை மத்திய அரசிடமிருந்துதான் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. நாம் கேட்கின்ற நிதியை மத்திய அரசு முழுமையாகத் தருவதில்லை. கடந்த ஆண்டு நம்முடைய தமிழகத்தில் உள்ள 1,601 கி.மீ. இந்திய தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்காக 1,040 கோடி ரூபாய் கேட்டிருந்தோம். அதில் 352 கோடி ரூபாயைத்தான் அவர்கள் தந்திருக்கின்றார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியில் இருக்கின்ற அந்தச் சாலையினுடைய பிரச்சினையைப்பற்றி இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். இதுகுறித்து மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்திற்கு எழுதி, உரிய நிதியைப் பெற்று, அந்தச் சாலையை அமைக்கின்ற பணியினை நடப்பாண்டிலே முடிப்பதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

முற்பகல் 10—25

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி தென்காசிக்குட்பட்ட, வி.கே.புதூர், வீராணம்—

ஊத்துக்குளி வழியாக சங்கரன்கோவிலுக்குச் செல்கின்ற பாதை கடந்த ஆட்சியாளர்களால் பராமரிக்கப்படாததால் குண்டும், குழியுமாக இருக்கிறது. இப்பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் வியாபாரத்திற்காக சங்கரன்கோவிலுக்குச் செல்ல இந்த சாலையைத்தான் பயன்படுத்துகிறார்கள். அதுமட்டுமல்லாமல், கல்லூரி மாணவர்களும் இந்தச் சாலையைப் பெரிதும் பயன்படுத்துகிறார்கள். இந்தச் சாலை உள்ள வழியில் பல குக்கிராமங்கள் இருப்பதால், இந்தச் சாலையை State Highway ஆக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில், தமிழகத்தில் இருக்கின்ற சாலைகள் எல்லாம் எங்கெங்கு சேதம் அடைந்திருக்கின்றனவோ, அவையெல்லாம் கண்டறியப்பட்டு, இத்துறையினுடைய நிதிநிலைக்கு ஏற்ப நடப்பாண்டில் சீரமைக்க எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.

திரு. எஸ்.கே. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரின் மையப் பகுதியில் வருகின்ற நான்கு வழிச் சாலையில், குரங்குச்சாவடி இணைப்புச் சாலை, ஜங்ஷன் செல்கின்ற பாதை, திருவாக்கவுண்டனூர் இணைப்புச் சாலை, சித்தர் கோயில் இணைப்புச் சாலை, கொண்டலாம்பட்டி சாலை இந்த வழியாகச் செல்கின்ற நான்கு வழிச் சாலைகளில் நெரிசல் மிகவும் அதிகமாக இருக்கின்றது. நான்கு வழிச் சாலை அமைத்தபொழுது இங்கு பாலங்கள் ஏற்படுத்தவில்லை. எனவே, தற்போது, இதை கவனத்தில்கொண்டு, அந்தப் பாலங்களை அமைக்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2012 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நான்குவழிச் சாலைகளிலே அதிகப் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது உண்மை. இச்சாலைகள், இந்திய தேசிய ஆணையத்திற்கு உட்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலையினுடைய நெருக்கடியைத் தவிர்க்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இது, இந்திய தேசிய ஆணையத்தின் மூலமாக, மத்திய தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அங்கு உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களும், குறிப்பாக, காஞ்சிபுரம், அரக்கோணம் வழியாகச் செல்கின்ற கனரக வாகனங்களும் ஒரே வழியிலே செல்வதால், 2 கி.மீ. தூரம் உள்ள அந்த மலைப் பாதையைக் கடப்பதற்கு 3 மணி நேரம் ஆகின்றது. இதை நேரடியாக, மாவட்ட நிருவாகிகளும், அமைச்சர் அவர்களும் பார்த்திருக்கிறார்கள். அங்கு, புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்பது அப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அதற்காக, நிலம் அளந்து கல் நடப்பட்டுள்ளது. எனவே, நில எடுப்புச் சட்டத்தின் மூலமாக அந்த நிலத்தை எடுத்து உடனடியாக புறவழிச் சாலையை அமைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அதைச் செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்குள்ள போக்குவரத்து நெரிசலைப் பற்றி குறிப்பிட்டு, அந்தப் பகுதிக்கு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்*

தலைவி அம்மா அவர்கள், நகராட்சிப் பகுதியில் எங்கெங்கு நெரிசல் இருக்கின்றதோ அப்பகுதிகளையெல்லாம் கண்டறிந்து அங்கு புறவழிச் சாலை எதிர்காலத்திலே அமைக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தப் பகுதியில் புறவழிச் சாலை அமைக்கின்ற பணியை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வியாசர்பாடி—எருக்கஞ்சேரி சாலையில் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற பாலம் கட்டி முடிக்கப்படாத காரணத்தினால் மிகப் பெரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு, துறைமுகத்திலிருந்து போகக்கூடிய வண்டிகள் போக முடியாத சிரமம் ஏற்பட்டுள்ளது. மூலக்கடையில் கட்டப்படுகின்ற பாலமும் நிலுவையில் இருக்கிற காரணத்தால் பெரும் சிரமத்திற்கு மக்கள் ஆளாகிறார்கள். ஆகவே, இந்த இரண்டு பாலங்களையும் அமைக்கும் பணியை விரைவுபடுத்த தமிழக அரசு தன் பங்கிற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பாலங்களை விரைந்து கட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அரசு அதற்குரிய நடவடிக்கை அனைத்தையும் எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலைகள் மற்றும் புதிய சாலைகள்

2012 ஏப்ரல் 10]

அமைக்கிற நேரத்தில், இடங்களை அரசு கையகப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படி எடுக்கின்ற நேரத்தில், சிலர் தவிர்க்க முடியாமல் நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்வதன் காரணமாக, சாலைகள் அமைக்கின்ற பணி தடைபடுகிறது என்று நமது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

எங்கள் சிவகங்கை பகுதியில்கூட புறவழிச் சாலை அமைக்கின்ற பணி நடைபெறும்போது, இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருந்தன. ஆனால், அங்கே இருக்கக்கூடிய பயனாளிகள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், பணத்திற்குப் பதிலாக, இடத்திற்கு இடம் மாற்று இடம் கொடுத்தால், நாங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லாமல், இடங்களை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், அரசு விதிகளில் அதற்கு வழிவகையில்லை என்று ஒரு நிலை நீடிக்கிறது. எனவே, இன்றைக்கு நிலம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம் தேவைப்படுகின்ற ஒரு சூழ்நிலையில், அரசு விதிகளில் மாற்று இடங்களைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தால், இப்படிப்பட்ட நிலைகளைப்போக்க முடியும் என்று கருதுகிறேன். அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலை அமைப்பதற்கோ அல்லது சாலைகள் அமைப்பதற்கோ நிலம் கையகப்படுத்தப்படுகின்றபொழுது, முதலில் alignment–ஐ உறுதி செய்தல், இரண்டாவது நில அளவைப் பணியை மேற்கொள்ளுதல், மூன்றாவது நில எடுப்பு அட்டவணை தயார் செய்தல், நான்காவது வருவாய்த் துறைமூலம் நிலம் எடுப்பதற்கான நெடுஞ்சாலை சட்டப் பிரிவு 15(2)–ன்கீழ் அறிவிப்பு செய்தல், ஐந்தாவது வருவாய்த் துறை பரிந்துரையின் பேரில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நிலம் எடுப்பதற்கு சட்டப் பிரிவு 15(1)–ன்கீழ் அரசு இதழில் அறிவிக்கை செய்தல், ஆறாவது வருவாய்த் துறை நிலம் கிரய வழிக்காட்டுதலின்படி விலையை நிர்ணயித்தல், ஏழாவது வருவாய்த் துறையின்மூலம் நிலத்தைக் கையகப்படுத்துதல், எட்டாவது நிலத்தை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு*

செய்தல், ஒன்பதாவது நிலம் பெறப்பட்ட பின் சாலைப் பணிகள் தொடங்கப்படுதல், இப்படி ஏராளமான பிரச்சினைகள் நிலத்தை எடுப்பதில், சாலை அமைப்பதில் இருக்கின்றன. எந்தவொரு சாலை அமைப்பதற்காக நிலங்களை எடுக்க வேண்டும் என்று சொன்னாலும், அந்த நிலத்தினுடைய உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்கு மாற்று இடம் வேண்டுமென்று கேட்டு இருக்கின்றீர்கள். எதிர்காலத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுகோட்டையில் பை பாஸ் சாலை திட்டம் தொடங்கப்பட்டு, 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாவது கட்டப் பணிகள் தொடங்கப்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது. இதற்கிடையே நிலங்களைக் கொடுத்த யாரோ ஒருவர் நீதிமன்றத்தில் தடையுத்தரவினைப் பெற்றிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். எனவே, விரைவிலே இந்தத் தடையுத்தரவை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, மேலும் நிதி ஒதுக்கீடு செய்து திட்டத்தை முழுமையாக முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதல் கட்ட சாலைப் பணி நடைபெற்று வருகின்றது, இரண்டாம் கட்டப் பணி அங்கே ஆரம்பிக்கின்றபொழுது, அந்த நிலத்தினுடைய உரிமையாளர் நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்தரவைப் பெற்றிருப்பதாகக் குறிப்பிடுகின்றார்கள். அந்த வழக்கை விரைந்து முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2012 ஏப்ரல் 10]

கேட்டுக்கொண்டதன்படி அந்தச் சாலைகள் அமைக்கும் பணியை விரைவில் அரசு தொடங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

நியாய விலைக் கடை

***454—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, இருத்துக்கோட்டை ஊராட்சி, தோட்டிகுப்பம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, இருத்துக்கோட்டை ஊராட்சி, தோட்டிகுப்பம் கிராமம் மற்றும் அதன் அருகில் உள்ள அர்த்தகூர், வள்ளிபுரம் மற்றும் பென்னாங்கூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 130 குடும்ப அட்டைதாரர்களுக்கு தோட்டிகுப்பம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதிக்குட்பட்ட தோட்டிகுப்பம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஐந்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் ரேஷன்*